வாரணம் பன்னாட்டுச் சமய ஆய்விதழ் தொகுதி: 1 இதழ்: 1 மார்ச் 2025
VAARANAM INTERNATIONAL JOURNAL OF RELIGIOUS STUDIES | VOL: 1 ISSUE: 1 MARCH 2025
Published by Niththilam Publications | www.niththilampublications



# THE ACT OF GRACE OF THE AZHVARGAL "NALAYIRAM SONGS"

*Author: M. JEYAPRAKASH NARAYANAN, Ph.D., Research Scholar,*
*Sri Sathguru Sangeetha Vidyalayam, College of Music & Research centre,*
*Madurai, Tamil Nadu.*
*Research Guide: Dr. S. VANATHI, Asst. Professor,*
*Sri Sathguru Sangeetha Vidyalayam, College of Music & Research centre,*
*Madurai, Tamil Nadu.*

*ABSTRACT*

*One who study closely the songs of Nalayira Divya Prabantham can clearly understand Alwars comprehensive devotion and wisdom. This literature carries the charm of our Tamil Language and rich with creative rhythm and excellence of ideas with in-depth meaning.*

*Alvars have made the content of Vedas simplified by sub dividing as simple pasuras in simple Tamil language for us. All the songs of Nallayira Divya Prabantham are spread across states and recited equivalent to North Indian Vedas in other languages such as Telugu, Kannada apart from Tamil.*

*This article talks about the abstract of the special qualities and information about the Nalayira Divya Prabandham written by twelve Alwars.*

*Key Words: Alwars, Nalayira Divya Prabandham, Nalayiram Songs, Iyarpa, Isaipa.*

# ஆழ்வார்களின் அருளிச் செயல் "நாலாயிரம் பாடல்கள்"

*கட்டுரையாளர்: ம. ஜெயப்பிரகாஷ் நாராயணன், முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம், இசை மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை, தமிழ்நாடு.*
*நெறியாளர்: முனைவர் எஸ்.வானதி, உதவிப்பேராசிரியர்.*
*ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம், இசை மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை, தமிழ்நாடு.*

**ஆய்வுச்சுருக்கம்**

ஆழ்வார்கள் ஆழ்ந்த பக்தியையும் அறிவினையும் உடையவர்கள் என்பது அவர்கள் அருளிச் செய்த நாலாயிர திவ்விய பிரபந்தப் பாடல்களை உற்று நோக்குவார்க்கு நன்கு புலனாகும். இவை ஆழ்ந்தறியத்தக்க சொல்நயம், பொருள்நயம் உடையனவாக விளங்குகின்றன. ஆழ்வார்கள் மிக எளிய முறையில் எளிய தமிழில் வேதத்தின் உட்பொருளைப் பாசுரங்களாக வடித்துத் தந்துள்ளனர். இவை அனைத்தும் கன்னலே, பாலே, தேனே, அமுதே போன்று தித்திப்பவையாகும். இப்பாடல்கள் அனைத்தும் அருளிச்செயல்கள்

என்றும், ஏற்றம் மிகுந்தவையாகவும் போற்றப்படுகின்றன. வடமொழி வேதத்திற்கு இணையாகத் தென்தமிழ் வேதமாகிய நாலாயிர திவ்விய பிரபந்தப் பாடல்கள், பாசுரங்கள் தமிழகம் மட்டுமின்றி கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட மொழிகள் பேசும் மாநிலங்களிலும் பாராயணம் செய்யப்படுகின்றன. இக்கட்டுரையில் பன்னிரண்டு ஆழ்வார்கள் இயற்றிய நாலாயிர திவ்விய பிரபந்தம் பற்றிய சிறப்புகளையும், செய்திகளையும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

திறவுச்சொற்கள்:ஆழ்வார்கள், திவ்யப் பிரபந்தம், நாலாயிரம் பாடல்கள், இயற்பா, இசைப்பா.



**முன்னுரை**

எம்பெருமான் திருமாலின் மீது பக்திகொண்டு அவரின் மங்கல குணங்களில் ஆழ்ந்தவர்கள் ஆழ்வார்களாவர். அத்தகைய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். ஆழ்வார்கள் அருளிச்செய்த அருட்பனுவல் நான்காயிரம் பாடல்கள் அடங்கிய தொகுப்பு "நாலாயிர திவ்யப் பிரபந்தம்" ஆகும். இவை 108 திவ்ய தேசங்களில் பாடப்பட்டவையாகும். அனைத்துப் பாடல்களும் திருமாலின் அவதாரச் சிறப்புகளையும், பெருமைகளையும் ஆழ்வார்கள் சிறப்பாகப் பாமாலையாகத் தொடுத்திருக்கின்றனர். இப்பாசுரங்கள் திவ்யமான கவிகள். ஆதலினால் ஆழ்வார்கள் அருளிய இப்பாடல் தொகுப்புக்கு "நாலாயிர திவ்யப் பிரபந்தம்" என்று பெயர். திவ்யம் என்பதற்கு இனிமை மற்றும் மேன்மையானது எனப் பொருள்படும். பிரபந்தம் என்பது பாடல்களின் தொகுப்பாகும்.

கி.பி 6-ம் நூற்றாண்டு தொடங்கி 9-ம் நூற்றாண்டுக்குட்பட்ட முந்நூறு ஆண்டு காலத்தில் ஆழ்வார் பெருமக்கள் இப்பாசுரங்களைப் பாடி தமிழையும், இறையுணர்வையும், பக்தியையும் ஒருங்கே வளர்த்துள்ளனர். இவர்களின் பாடல்கள் எளிமையும், இனிமையும். அழகும் பொலிந்து தமிழின் பெருமையை நிலைநாட்டி வருகின்றன. பிறகு 11-ம் நூற்றாண்டில் இப்பாடல்களைத் தொகுத்து இசைப்பா, இயற்பா எனத் தந்தவர் நாதமுனிகள் ஆவார்.

**நாலாயிர திவ்யப் பிரபந்தம் நூல் வடிவம் பெறுதல்**

நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை முதன்முதலில் அச்சுக்கு கொணர்ந்தவர் திருப்புட்குழி. கூர்மாச்சார்யர் என்பராவார். ஏட்டுச் சுவடிகளில் இருந்து நாலாயிரத்தைப் பகுதிபகுதியாக 1856 ஆம் ஆண்டு முதல் 1859 ஆம் ஆண்டு வரை பதிப்பித்து முடித்த தனிச்சிறப்பு இவருக்கு உண்டு. (பெரிய திருமொழியை இவர் பதிப்பிக்கவில்லை)

"தாம்பரத்திற்கு அருகிலுள்ள முடிச்சூர் என்னும் சிற்றூரில் பிறந்து கி.பி.19-ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் வாழ்ந்த அப்பாவு முதலியார் என்பவரே 1865-ல் திவ்யப் பிரபந்தங்கள் அனைத்தையும் வைப்பு முறைப்படி அமைத்து ஒரே பதிப்பாக அச்சிட்டவராவர். அத்துடன் தற்கால இராக தாளக் குறிப்புகளையும் இவரே அமைத்துத் தம் பதிப்பில் சேர்த்துள்ளார்." (கமலக்கண்ணன். இரா.வ, ப.112)

**பன்னிரு ஆழ்வார்கள்**

ஆழ்வார் என்ற சொல்லுக்கு மூழ்கியவர், ஆழ்ந்தவர் என்பது பொருள். இறைவனிடம் பக்தியில் ஆழ்ந்தவர்களாகிய அடியார்களே; ஆழ்வார்கள் என்ற பெயரைப் பெறுகின்றனர். பன்னிரு ஆழ்வார்கள் அவதார வைப்புமுறையை உபதேச இரத்தின மாலை பின்வருமாறு எடுத்தியம்புகின்றது.

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ் மழிசை
அய்யன் அருள் மாறன் சேரலர்கோன்-துய்ய பட்ட
நாதன் அன்பர்தாள் தூளி நற்பாணன் நற்கலியன்
ஈதிவர் தோற்றத் தடைவாம் இங்கு. - *(4)*

ஆழ்வார் திருமகளார் ஆண்டாள் மதுரகவி
யாழ்வார் எதிராச ராமிவர்கள்-வாழ்வாக
வந்துதித்த மாதங்கள் நாள்கள் தம்மின் வாசியையும்
இந்த உலகோர்க்கு உரைப்போம்யாம்- *(21)*

உபதேச இரத்தின மாலை — மணவாள மாமுனிகள்

பன்னிரு ஆழ்வார்கள் பின்வருமாறு

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருமழிசையாழ்வார்
5. நம்மாழ்வார்
6. மதுரகவியாழ்வார்
7. குலசேகராழ்வார்
8. பெரியாழ்வார்
9. ஆண்டாள்
10. தொண்டரடிபொடியாழ்வார்
11. திருப்பாணாழ்வார்
12. திருமங்கையாழ்வார்

ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவர் மட்டுமே பெண். அவர்தாம் ஆண்டாள் நாச்சியார். ஆழ்வாருள் பல வகுப்பினரும் உள்ளனர். இதன்மூலம் இறைவனிடத்தில் வைக்கின்ற உண்மையான அன்பு, பக்தி, அறிவு, தூய்மைக்கு எத்தகைய சிறப்பான உயரிய இடம் கொடுக்கப்பட்டிருந்தது என்பது புலனாகிறது.

நாலாயிர திவ்யப் பிரபந்தம் இசைப்பா, இயற்பா

நாதமுனிகள் தாம் வைணவ பாரம்பரியத்தின் முதல் ஆச்சாரியர் என்று சொல்லப்படுகின்றார். இவரால் நாலாயிர திவ்யப் பிரபந்தம் மீண்டும் உயிர்பிக்கப் பட்டதாக கருதப்படுகின்றது. இதனை வடிவழகிய நம்பிதாசரின் நாதமுனி குருபரம்பரை குறிப்பிடுகின்றது.

நாலாயிர திவ்யப் பிரபந்தம் பாசுரங்களை அருளிச்செய்த ஆழ்வார்கள் பண்ணுடன் பாடினர். நாதமுனிகள் நான்காயிரம் பாடல்களையும் இயல் இசைக்குத் தக்கவாறு பிரித்தார். அவ்வாறு பிரித்த ஒவ்வொரு பகுதியிலும் ஆயிரம் பாடல்கள் இருக்குமாறு அடைவு படுத்தினார். பாசுரங்களை இசைப்பா,

இயற்பா எனப்பிரித்து இசைப்பாக்களை மூன்று தொகுதிகளாகவும், இயற்பாக்களை ஒரு தொகுதியாகவும் வகுத்துள்ளார். இசைப்பா பண்ணுடன் பாடுதற்கு உகந்தவை என்னும் கருத்தில் இசைப்பா என்று தனியாகப் பிரித்துத் தொகுக்கப்பட்டன. இயற்பா இயலாக சேவிக்கத்தக்கது என்னும் பொருளில் அவ்வாறு பெயர் பெற்றது. இப்பாகுபாடு இயல், இசை, நாடகம் என்னும் பழைய தமிழ் இலக்கிய மரபை நினைவூட்டுவதாக உள்ளது.

நாதமுனிகள் இசைப்பாக்களை தேவ கானத்திலே ஏறிட்டு சேவித்ததாகவும் இயற்பாவை இயலாகச் சேவித்து வந்ததாகவும் கோயிலொழுகு என்னும் நூல் கூறுகின்றது.



நான்கு ஆயிரம் பாடல்கள், 24 நூல்கள்

ஆழ்வார்களும் அவர்கள் அருளிச் செய்த 24 நூல்களும், பாசுரங்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு காணலாம்.

வையகமெண் பொய்கைபூ தம்பே யாழ்வார்
மழிசையர் கோன் மகிழ்மாறன் மதுரகவிகள்
பொய்யில் புகழ்க் கோழியர்கோன் விட்டுச்சித்தன்
பூங்கோதை தொண்டரடிப் பொடி பாணாழ்வார்
ஐயனருட் கலியனெதி ராசர் தம்மோ
டாறிவர் ஒரொருவர் அவர் தாஞ்செய்த
துய்ய தமிழிருபத்து நான்கிற் பாட்டின்
தொகை நாலாயிரமு மடி யோங்கள் வாழ்வே

(தேசிகப் பிரபந்தம் 383 - பிரபந்த சாரம்: 17)

முதல் ஆயிரம் (நூல்கள் 9 - இசைப்பா)

| வ. எண் | ஆழ்வார் | அருளிச்செய்தது | பாசுரம் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பெரியாழ்வார் | பெரியாழ்வார் திருமொழி | 473 |
| 2 | ஆண்டாள் | திருப்பாவை | 30 |
| 3 | ஆண்டாள் | நாச்சியார் திருமொழி | 143 |
| 4 | குலசேகராழ்வார் | பெருமாள் திருமொழி | 105 |
| 5 | திருமழிசையாழ்வார் | திருச்சந்த விருத்தம் | 120 |
| 6 | தொண்டரடிபொடியாழ்வார் | திருமாலை | 45 |
| 7 | தொண்டரடிப்பொடியாழ்வார் | திருப்பள்ளியெழுச்சி | 10 |
| 8 | திருப்பாணாழ்வார் | அமலனாதிபிரான் | 10 |
| 9 | மதுரகவியாழ்வார் | கண்ணிநுண் சிறுத்தாம்பு | 11 |
| | மொத்தம் | | 947 |

இரண்டாம் ஆயிரம் (3 நூல்கள் - இசைப்பா)

| வ. எண் | ஆழ்வார் | அருளிச்செய்தது | பாசுரம் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி | 1084 |
| 2 | திருமங்கையாழ்வார் | திருக்குறுந்தாண்டகம் | 20 |
| 3 | திருமங்கையாழ்வார் | திருநெடுந்தாண்டகம் | 30 |
| | மொத்தம் | | 1134 |

மூன்றாம் ஆயிரம் (1 நூல் - இசைப்பா)

| வ. எண் | ஆழ்வார் | அருளிச்செய்தது | பாசுரம் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நம்மாழ்வார் | திருவாய்மொழி | 1102 |

நான்காம் ஆயிரம் ( 11 நூல்கள் - இயற்பா)

| வ. எண் | ஆழ்வார் | அருளிச்செய்தது | பாசுரம் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பொய்கையாழ்வார் | முதல் திரு அந்தாதி | 100 |
| 2 | பூதத்தாழ்வார் | இரண்டாம் திரு அந்தாதி | 100 |
| 3 | பேயாழ்வார் | மூன்றாம் திரு அந்தாதி | 100 |
| 4 | திருமழிசையாழ்வார் | நான்முகன் திரு அந்தாதி | 96 |
| 5 | நம்மாழ்வார் | திருவிருத்தம் | 100 |
| 6 | நம்மாழ்வார் | திரு ஆசிரியம் | 7 |
| 7 | நம்மாழ்வார் | பெரிய திருவந்தாதி | 87 |
| 8 | திருமங்கையாழ்வார் | திரு எழுக்கூற்றிருக்கை | 1 |
| 9 | திருமங்கையாழ்வார் | சிறிய திருமடல் | 40 |
| 10 | திருமங்கையாழ்வார் | பெரிய திருமடல் | 78 |
| 11 | திருவரங்கத்தமுதனார் | இராமானுஜ நூற்றந்தாதி | 108 |
| | மொத்தம் | | 817 |

**தமிழ் இலக்கிய வகையுள் நாலாயிரம்**

நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் அந்தாதி, தாண்டகம், திருப்பள்ளியெழுச்சி, நூற்றந்தாதி, மடல், மாலை, விருத்தம், உந்தியார், கோத்தும்பி, சப்பாணி, தாலாட்டு, திருவெழுக் கூற்றிருக்கை, பாவை ஆகிய சிற்றிலக்கிய வகைகள் அமைந்துள்ளன.



VIJRS 2025

**அந்தாதி**

முதலாழ்வார்களாகிய பொய்கையார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் அருளிய முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி ஆகியனவும், திருமழிசையாழ்வாரின் நான்முகன் திருவந்தாதியும், நம்மாழ்வாரின் பெரிய திருவந்தாதியும் திருவரங்கத்து அமுதனாரின் இராமானுஜ நூற்றந்தாதி ஆகியன அந்தாதி என்னும் சிற்றிலக்கிய வகையினவாகும்.

**திருச்சந்த விருத்தம், மடல்**

திருமழிசையாழ்வாரின் திருச்சந்தவிருத்தம், பல்சந்த மாலை என்னும் இலக்கிய வகையோடு இயைந்து எண்ணத்தக்கதாகும். திருமங்கையாழ்வாரின் பெரிய திருமடல், சிறிய திருமடல் என்பன மடல் என்னும் இலக்கிய வகைக்குரியவை.

**திருத்தாண்டகம், திருவெழுக் கூற்றிருக்கை**

வைணவ ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் தாண்டக வேந்தராக விளங்குகின்றார். அவர் பாடிய திரு நெடுந்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம் என்பன தாண்டகம் என்னும் யாப்புச் சார்பு இலக்கிய வகையைச் சார்ந்தது.

மேலும், திருமங்கையாழ்வார் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் திருவெழுக் கூற்றிருக்கை என்னும் இலக்கிய வகையையும் பாடியுள்ளார்.

**பிள்ளைத்தமிழ்**

குலசேகராழ்வார் பாசுரங்களிலும், பெரியாழ்வார் பாடல்களிலும், ஆண்டாள் பாடல்களிலும் பிள்ளைத்தமிழ் இலக்கிய வகையின் பகுதிகள் அமைந்துள்ளன. இவ்வாறு தமிழிலக்கியத்திற்கு ஆழ்வார்களின் தொண்டு இன்றியமையாத இடத்தைப் பெற்று விளங்குகின்றது.

ஆழ்வார்களின் பாடல்கள் “திராவிட வேதம்”

“வேதந்தமிழ் செய்த மாறன் சடகோபன்”

“வேதத்தை செந்தமிழால் விரித்துரைத்தோன் வாழியே”

-ஆழ்வார்கள் வாழி திருநாமம், அப்பிள்ளை ப.127

நாலாயிர திவ்யப் பிரபந்தம் பாசுரங்களில் தமிழ் மணம் பெருகிப்பாய்கின்றது. வைணவ அன்பர்கள் இப்பாக்களை உச்சிமேல் வைத்துப் போற்றுகின்ற சிறப்புக்குரியதாகும். நம்மாழ்வார் அருளிய பாசுரங்கள் நான்கு வேதசாரமாகும். திருவிருத்தம் ரிக் வேத சாரமாகவும், திருவாசிரியம் யசூர் வேத சாரமாகவும், திருவாய்மொழி சாம வேத சாரமாகவும், பெரிய திருவந்தாதி அதர்வண வேதத்தின் சாரமாகவும் போற்றப்படுகின்றது. திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழுக் கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திரு நெடுந்தாண்டகம் என்பன வேதத்தின் ஆறு அங்கங்களாக போற்றப்படுகின்றன.

**வேதம் அனைத்திற்கும் வித்து**

ஆண்டாள் நாச்சியார் அருளிய கோதை தமிழ் “திருப்பாவை” முப்பது பாசுரங்களும் வேதங்களுக்கு வித்தாக விளங்குவதாக வேதப் பிரான் பட்டர் அருளிய பின்வரும் பாடலில் அருளியுள்ளார்.

பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்

வேதமனைத்துக்கும் வித்தாகும் — கோதை தமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு. (2)

**திவ்யப் பிரபந்தப் பாடல்களின் சிறப்பு**

திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழி பாசுரத்தில்

ஞாலம் எல்லாம் அமுது செய்து, நான்மறையும்
தொடராத பாலகனாய், ஆலிலையில் பள்ளி
கொள்ளும் பரமனிடம்" - பெரிய திருமொழி (4-1-6)

என்று பரம்பொருளின் வடிவியல்பை குறிப்பிடுகின்றார். பரம்பொருளின் ஸ்வரூபத்தை நாடிச் சொல்லிக் கொண்டே பரம்பொருளைத் தொடர்ந்து சென்ற வேதம் அதன் முடிவை எட்டமுடியாமல் திரும்பி வந்தது.

ஆழ்வார்களின் வரலாற்றில் நான்கு வேதங்களின் சாரமாகிய திவ்யப் பிரபந்தங்களைப் பெற, எம்பெருமான் தானும் ஆழ்வார்களின் பின்னே தொடர்ந்து சென்று பாசுரங்களைப் பெற்று திவ்ய தேசப் பெருமான் ஆனார் (திருநின்றவூர்) என்பது தெளிவாக விளங்கும்.

சுவாமி திருவீதி உலாவின் போது, பெருமாளுக்கு முன்பாக திவ்யப் பிரபந்த கோஷ்டி பாராயணம் செல்ல ஆழ்வார்களின் தமிழைக் கேட்கும் ஆசையினால் பெருமாள் பின்தொடர்ந்து செல்கின்றார். ஆனால், வேதங்களோ பெருமாளைப் பின் தொடர்ந்து வருகின்றது. இந்நிகழ்வு தற்போதும் பெருமாளின் உற்சவ விழாக்களில் திருவீதி உலாவின் போது காணமுடிகிறது. இதனையே பிள்ளைத்தமிழில், பைந்தமிழ் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலே என்றார் குமரகுருபர சுவாமிகள்.

வடமொழி வேதமும் திவ்யப் பிரபந்தமாகிய தமிழ் வேதமும் பொருளொற்றுமையால் ஒன்றே ஆகும். வடமொழியில் பிரமாண நூல்களைக் கொண்டு திவ்யப் பிரபந்த பாசுரங்கட்கும், திவ்யப் பிரபந்தப் பாசுரங்கள் கொண்டு வடமொழி பிரமாண நூல்களுக்கும் இருமொழி வல்லவர்களை உரைவளம் எடுத்துகாட்டும் போது அதன் உண்மை பொருள் நமக்கு விளக்கமாகவும், வியப்பாகவும் இருப்பதை உணரமுடியும்.

**நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் பண்கள், தாளங்கள்**

விட்டுச் சித்தன் சொன்னமாலை பத்தும் பண்ணின்பம் வரப் பாடும் பத்தர்
- பெரியாழ்வார் திருமொழி (3-4-11)

கலியன் பண்ணார் பாடல்
- குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி (1-9-10)

சடகோபன் சொல் சந்தங்கள் ஆயிரம்
- நம்மாழ்வார் திருவாய்மொழி (10-9-11)

இத்தொடர்களால் திவ்யப் பிரபந்த பாசுரங்கள் பண் அமைய இசையுடன் பாடப்பட்டவை என்பதை அகச்சான்றாக அறியமுடிகின்றது. நாலாயிர திவ்யப் பிரபந்த நூலில் 29 பண்களும் 7 வகையான தாளங்களையும் காணமுடிகின்றது. இப்பாசுரங்களை பண்ணிசையாகவும் பல்வேறு இராகங்களையும் கொண்டு இசையரங்குகளாகவும் இறைவன் திருமுன்பு சேவா காலம் என்னும் பாராயணமாகவும், அரையர் சேவை மூலமாக இனிய சந்தத்தோடும், அபிநயத்தோடும் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழையும்

போற்றும் வகையில் இப்பாசுரங்கள் இன்றளவும் இசையால் இறைவனுக்கு விண்ணப்பிக்கப்பட்டு வருகின்றது.

"ஆழ்வார்களேற்றம் அருளிச் செயலேற்றம்"

"ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல் வாழி"

**முடிவுரை**

ஆழ்வார்கள் பாடல்கள் பக்திக்கு வரம்பாக அமைந்திருக்கின்றன. தேனாக, கரும்புச் சாறாக, அமுதாக இனிக்கும் பாசுரங்கள் இவையாகும். நாலாயிர திவ்யப் பிரபந்த பாசுரங்கள் ஆழ்வார்களுடைய ஞான அனுபவ நிலையைப் புலப்படுத்துவன ஆகும். இன்றைக்கு நாம் சேவிக்கும் நாலாயிர திவ்விய பிரபந்தம் நாதமுனிகளின் தவப் பயனாலே நமக்குக் கிடைத்த அரிய செல்வம். "கவி பாட வல்லவர்கள் அவன் புகழையே பாட வேண்டும். அடியார்கள் கூடி ஆரவாரம் செய்து இன்னிசையால் அவன் புகழ் பாடிட வேண்டும்" என்பார் நம்மாழ்வார். அவ்வாறே, அன்பு நிறையப் பெற்ற மனத்தினால் இசையோடு இறைவனைத் தொழுதெழ அவனருளால் அவனை அடையும் பாக்கியத்தை நமக்கு நல்க வல்லதாய் பிரபந்தப் பாசுரங்கள் விளங்குகின்றன.

**துணை நூல்கள்**

1. கமலக்கண்ணன். இரா. - நாலாயிர திவ்யப் பிரபந்தம், மூலமும் தெளிவுரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 600 017. (2011)

2. கார்மேகம் . M. - தமிழிலக்கிய வரலாறு, அழகப்பா பல்கழைக்கழகம், பி.ஏ (தமிழ்),விகாஸ் பப்ளிசிங் கவுஸ் (பி) லிட், உத்திரபிரதேசம் - 201301. (2021)

3. சாம்பசிவராவ் (ப.ஆ) - நித்யாநு சந்தானம் (தென்கலை), ஆழ்வார்களின் பாசுரத் தொகுப்பு) திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி - (2017)

4. சீனிவாசன். ரா. - தமிழ் இலக்கிய வரலாறு, அணியகம் வெளியீடு, சென்னை - 600030. (1997)

5. செயராமன். ந.வீ. - சிற்றிலக்கியத்திறனாய்வு, இலக்கியப்பதிப்பகம், தேனாம்பேட்டை, சென்னை - 18. (1980)

6. மணவாள மாமுனிகள் - உபதேச ரத்தின மாலை, செங்கல்வராய நாயக்கர் ஆர்பனேஜ், அச்சு இயந்திரசாலை, வேப்பேரி, சென்னை. (1907)

7. ஸ்ரீ மந்நிகமாந்த மஹாதேசிகன் - ஸ்ரீ தேசிக பிரபந்தம், ஸ்ரீ ராம தேசிகாச்சார்ய சுவாமி, தி லிட்டில் **பிளவர் கம்பெனி,** சென்னை - 600017. (1996)